**அனுப்புநர்**

சா. சேதுராமவர்மா,

அரசுத் தேர்வுகள் இயக்குநர்,

சென்னை – 600 006.

**பெறுநர்**

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்

ந.க.எண். 020846 /எப்1/2022 நாள். 23.02.2023

ஐயா / அம்மையீர்,

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 - மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வு, மார்ச்/ஏப்ரல் 2023 – திருத்தங்கள் பதிவேற்றம் செய்யப்பட்ட பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியலை பதிவிறக்கம் செய்தல் - தொடர்பாக.

**பார்வை :** அரசுத் தேர்வுகள் இயக்குநரின் இதே எண்ணிட்ட கடிதம், நாள்.02.02.2023

------

பார்வையில் காணும் இவ்வலுவலகக் கடிதத்தில், அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும் மார்ச்/ஏப்ரல் 2023 மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்விற்கான தங்கள் பள்ளி மாணாக்கர்களின் தேர்வெண்ணுடன் கூடிய பெயர்ப்பட்டியலில் திருத்தங்கள் இருப்பின், 03 .02.2023 **முதல் 10.02..2023 வரையிலான நாட்களில்** EMIS PORTAL- லில் Nominal Roll பகுதிக்குச் சென்று அத்திருத்தங்களை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது.

தற்போது, முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்களது ஆளுகைக்குட்பட்ட அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும், EMIS PORTAL- லில் மேற்கொண்ட திருத்தங்கள் பதிவேற்றம் செய்யப்பட்ட மார்ச்/ஏப்ரல் 2023 மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்விற்கான தங்கள் பள்ளி மாணாக்கர்களின் பெயர்ப்பட்டியலை **24.02.2023 p.m. பிற்பகல் முதல்** www.dge1.tn.gov.in என்ற இணையதள முகவரிக்குச் சென்று தங்கள் பள்ளிக்கு அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் வழங்கப்பட்டுள்ள USER ID மற்றும் Password-ஐ பயன்படுத்தி பதிவிறக்கம் செய்து கொள்ள அறிவுறுத்துமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

**ஒம்/-**

**இயக்குநர்**

**நகல்:**

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்

www.Padasalai.Net

**அனுப்புநர்**

திரு.சா.சேதுராமவர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள், மற்றும் இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை மற்றும் தனியார் பள்ளிகள்)
3. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்

**ந.க.எண்.020846 /எப்.1/2022** **நாள்: 23.02.2023**

**ஐயா / அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 – மார்ச்/ஏப்ரல் 2023, மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வு – பெயர்ப்பட்டியலை பதிவிறக்கம் செய்ய தெரிவித்தல் – சார்பு.

**பார்வை:** இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம், நாள்: 24.01.2023.

*****

பார்வையில் காண் கடிதத்தில் நடைபெறவுள்ள மார்ச்/ஏப்ரல் 2023, மேல்நிலை முதலாம் ஆண்டு (+1) பொதுத் தேர்விற்கான பள்ளி மாணவர்களின் தேர்வெண்ணுடன் கூடிய பெயர்ப்பட்டியலை அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களும் 24.01.2023 முதல் பிப்ரவரி முதல் வாரம் வரையிலான நாட்களில் அரசுத் தேர்வுகள் இணையதளத்திற்கு (www.dge1.tn.gov.in) சென்று பெயர்ப்பட்டியலை பதிவிறக்கம் செய்துகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து, மேல்நிலை முதலாம் ஆண்டு பள்ளி மாணவர்களின் விவரங்கள் அடங்கிய, Excel Format-ல் உள்ள பெயர்ப்பட்டியலினையும் (Nominal Roll), +1 Arrear மாணவர்களின் பெயர்ப்பட்டியலினையும் மற்றும் தனித்தேர்வர்களின் பெயர் பட்டியலினையும் (+1, +2) அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள் மற்றும் அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் 24.02.2023 p.m. பிற்பகல் முதல் தங்களுக்கென வழங்கப்பட்டுள்ள User Id மற்றும் Password-ஐ பயன்படுத்தி பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ஒம்/-**
**இயக்குநர்**

www.Padasalai.Net